# தமிழ்நாடுஅரசு
## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
## மதுரை மாவட்டம்
## வட்டாட்சியர் அலுவலகம், கள்ளிக்குடிவட்டம்.

அறிவிக்கைஎண். 01/2025 நாள்:16.10.2025

**வேலைவாய்ப்புஅறிவிப்பு**

மதுரை மாவட்ட வருவாய் அலகு, கள்ளிக்குடி வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| விண்ணப்பம் பெறப்படும் நாள் | 17.10.2025 - முதல் |
| விண்ணப்பம் அளிப்பதற்கான இறுதி நாள் | 15.11.2025 மாலை 5.45 மணிக்குள் |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| ஊதிய விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100-35,100/- |
| நிரப்பப்படஉள்ளகாலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 02 |

**கிராமஉதவியாளர் காலிப்பணியிடங்கள் உள்ளகிராமங்கள்**

| வ.எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|
| 1. | எஸ்.வெள்ளாகுளம் குரூப் |
| 2. | பாறைக்குளம் குரூப் |

**இனசுழற்சிமுறை**

| வ.எண். | சுழற்சிஎண் | இனம் | பொது/பெண் | இடஒதக்கீடு (ம) முன்னுரிமை |
|---|---|---|---|---|
| 1 | 28 | MBC/DNC | பொது | முன்னுரிமையுள்ளவர் |
| 2 | 29 | GT | பெண் | முன்னுரிமையற்றவர் |

**தகுதிகள்**

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வயது(01.10.2025)-இன் படி</td><td colspan="2">குறைந்தபட்சம் 21 வயதுநிரம்பியிருக்கவேண்டும்.<br>(அனைத்துபிரிவினருக்கும்)<br><br>அதிகபட்சம் வயது<br><br>1. பொதுபிரிவினர் - 32 வயது<br><br>2. பிற்படுத்தப்பட்டவகுப்பினர் (BC)/BC(M)/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ( MBC)/சீர்மரபினர் (DNC) வகுப்பினர் - 39 வயது<br><br>3.பட்டியல் இனத்தவர் (SC)/ SC(A)/ பழங்குடியினர் (ST) / ஆதரவற்ற விதவை - 42 வயது<br><br>(அரசாணை (நிலை) எண். 91,மனிதவளமேலாண்மைத் (எஸ்) துறை,நாள்: 13.09.2021-ன் படி மற்றும் அரசின் கூடுதல் முதன்மைச் செயலாளர் அவர்களின் கடிதம்.எண். 636/பணி 8(1)/2025, நாள்:18.09.2025-ன் படிவயதுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது)</td></tr>
<tr><td>முன்னாள் இராணுவனத்தினர்</td><td>இதரவகுப்பினர் - 50 வயது<br><br>பிற்படுத்தப்பட்டவகுப்பினர் (BC)/BC(M)/ மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர் (MBC) / சீர்மரபினர் (DNC) வகுப்பினர்/ பட்டியல் இனத்தவர் (SC)/ SC(A)/ பழங்குடியினர் (ST) - 55 வயது<br><br>(தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 மற்றும் அரசாணை (நிலை) எண். 91, மனிதவளமேலாண்மைத் (எஸ்) துறைநாள்: 13.09.2021-ன் படி)</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மாற்றுத்திறனாளிகள் | நிர்ணயிக்கப்பட்டவயதிலிருந்து 10 ஆண்டுகள்<br><br>(தமிழ்நாடுஅரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 -ன் படி) |
| 2. | கல்வித்தகுதி | தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC –Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்.<br><br>(குறிப்பு - SSLC – Secondary School Leaving Certificate Examination மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்கவேண்டும்) | |
| 3. | இதரதகுதி | 1. மிதிவண்டி / இருசக்கரமோட்டார் வாகனம் ஒட்டும் திறன்.<br>2. வாசித்தல் மற்றும் எழுதும் திறன் (தமிழில்)<br>3. சம்பந்தப்பட்டகிராமம் / தாலுகா(கள்ளிக்குடிவட்டம்) எல்லைக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும். (நாளதுதேதியின்படிதாலுகா அதிகாரவரம்பிற்குட்பட்டு)(தற்போதையமுகவரிச்சான்றுடன்) | |
| | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பங்கள் மதுரைமாவட்டஆட்சியர் அலுவலக இணையவழி முகவரியான https://madurai.nic.in-இல் பதிவிறக்கம் செய்து, அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை நேரிலோ அல்லது பதிவுஅஞ்சல் மூலமாகவோ கள்ளிக்குடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் எதிர்வரும் 15.11.2025 அன்று மாலை 05:45 மணிக்குள் அனுப்பி வைத்திட வேண்டும் அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தமிழ்நாடுகிராமஉதவியாளர் பணியமைப்பு விதிகளின் படி தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பத்தாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் எனதெரிவிக்கப்படுகிறது. | |

16/10/25

வருவாய் வட்டாட்சியர்
கள்ளிக்குடி.